917 917

Reg. No. M. 1354

போதனை விஷய ஞங்கொத்து

20 AUG 1940 MADRAS

மாதமோருமுறை மலரும்.

கொத்து 31

மலர் 1



Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 ஜுலை 1940

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

...1. தனிப்பிரதி அணு $1\frac{1}{2}$.

சு
Nau.NIIPP
N40.31.1
182463

BODHANA VISHAYA POONGOTHU

Magazine of Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	1
2.	Proceedings of the Director of Public Instruction	4
3.	Results of the T.S.L.C. Examinations, 1940 ...	5
4.	செயல்முறை	8
5.	பார்புகழ் சாரணன் பண்பு பத்து	13
6.	காவியத்தில் ஓவியம்	15
7.	பாடக் குறிப்பு	17
8.	கல்வித் துறையில் கற்கும் கைவேலைகள் ...	21
9.	இயற்கைப் பாடம்: ரப்பர்	23
10.	பழைய ஞாபகங்கள் நெ. 1	25
11.	துண்டு துணுக்குகள்	27
12.	எமது பாடசாலை நிகழ்ச்சிகள்	28
13.	புளியால்பதியில் பெற்றோர் சங்கப் புனித விழா ...	29
14.	பால ஸங்கீத வாசகம்	30

Imprimatur: ✠ JAMES,

Bishop of Trichinopoly.

தேவை! ஏஜெண்டுகள் தேவை!

எமது "போதனாவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனாவிஷயப் பூங்கோத்து,
R. C. போதனாமுறைப் பாடசாலை, திருச்சி.

பங்கிராஸ்

அல்லது பூர்வீக சுரங்க சபையின் விநோத விர்த்தாந்தம்

REGISTRAR OF ... 20 AUG 1940 MADRAS

வாசிக்க இனிமை!

தெவிட்டாத பேரின்பம்

பிரக்கியாதிபெற்ற
தமிழ் எழுத்தாளர் சேசு சபை
சந்தியாகப்பர் சுவாமியார்
இயற்றியது.

கிறீஸ்துவர்களும், இதர மதஸ்தரும் இதில் அடங்கியுள்ள விநோத விர்த்தாந்தச் சங்கதிகளை வாசித்தால் எல்லோரும் ஆத்மார்த்த பிரயோஜனம் அடைவார்கள். ஆதிகாலத்தில் நமது முன்னோராகிய கிறீஸ்துவர்கள் சத்திய வேதத்தில் எவ்வளவு அபிமானம் உள்ளவர்களாயிருந்தார்களென்றும் அதில்பிரமாணிக்கம் தவறாதிருக்க எவ்வளவு மனத்துணிவோடு துன்ப வேதனைகளுக்கும் கொடிய சாவுக்கும் அஞ்சாமல் வேதசாட்சியான வர்த்தமானங்களை வாசிக்க கல்மனமும் கரையும்.

519 பக்கங்கள் விலை ரூ. 1—8—0.
தபாற் செலவு ரூ. 0—6—0.

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை
அச்சாபீசில் கிடைக்கும்.

ELEMENTS OF ENGLISH GRAMMAR IN TAMIL

(இங்கிலீஷ் இலக்கண நூலாதாரம்)

13th edition, a very useful book for primary classes.

Crown 8vo, 76 pp. Wrapper As. 4.

Postage: 0-1-3.

FIRST ENGLISH GRAMMAR

By Rev. J. H. Quinn, S.J. 6th Edition. Treats of English words and of the construction of Sentences written mainly for the use of pupils in the I II and III Forms.

Crown 8vo, 88 pp. Stiff Cover As. 5.

Postage: 0-1-6.

அறநெறி மார்க்கம்

அல்லது

மனிதனின் அதிமுக்கிய அலுவல்

சங். ஜெ. ஜெகநாத சுவாமிகள்

ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து எழுதிய

அருமையான புஸ்தகம்

கடவுள் ஒருவர் உண்டென்று அங்கீகரிக்கும் எம்மதத்தினருக்கும் பொதுவான நன்மார்க்க போதனைகளடங்கியது.

நமது ஜீவிய காலத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நடந்துகொள்ளவேண்டிய வழியைக்காட்டும் உத்தம நண்பன்.

பக்கம் **189**. விலை **8** அணா. தபாற் செலவு 2 அணா 6 பைசா.

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீசுக்கு எழுதவும்.

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து **31**] **15 ஜூலை 1940** [மலர் **1**

பத்திராதிபர் குறிப்புகள்

பூங்கோத்தின் புது ஆண்டு. சென்ற மாதத்தோடு நமது பூங்கோத்தின் 30-வது ஆண்டு நிறைந்து இந்த ஜூலை மாதத்திலிருந்து அதன் 31-வது கொத்து துவக்குகின்றது. எனவே இப்புதுக் கொத்தின் முதல் மலர் தோன்றுகின்ற இச்சந்தர்ப்பத்தில் நமது பூங்கொத்தை ஆதரித்துவருகின்ற எமது பழைய மாணவர்கட்கும் ஏனைய பூங்கொத்து நேயர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துதலையும் கூறுகின்றோம்.

அத்துடன் நமது நேயர்கள் அனைவரும் தத்தம் சந்தாக்களை அப்போதைக்கப்போது புதுப்பித்துக்கொள்ளுவதோடு இன்னும் பல புது சந்தாதார்களைச் சேர்த்து பூங்கொத்தின் மணத்தைச் சகலரும் நுகரும்படி உதவுவர் என நம்புகின்றோம்.

* * *

T. S. L. C. பரீட்சை 1940. சென்ற மார்ச்-மீ நடந்த ஷை பரீட்சை எழுதின எமது 79 எலிமேண்டரி ஹையர் கிரேடு மாணவர்களில் 77 பேர் (98%) தேறியுள்ளார்கள். முழு விவரம் மற்றோரிடத்திற் காண்க.

இவ்வளவு உயர்வாயும் நேர்மையாயும் மெச்சத்தக்கவிதமாய்ப் பரீட்சையில் தேறி வெற்றியடைந்துள்ள இம்மாணவர்

கட்கும், அங்ஙனமே சென்ற மாதத்தில் பிரசுரமாயிருந்தபடி வெற்றியடைந்துள்ள எமது செக்கண்டரி கிரேடு மாணவர்கட்கும் எமது மனமுவந்த பாராட்டும், வாழ்த்தும், உரிமையாகும்.

New Admissions—போதனுப் பயிற்சி சேர்க்கை. இவ்வருஷம் நமது போதனுமுறைப் பாடசாலையில் சேர்ந்து பயிலுவதற்காக ப்ரவேசப் பரீட்சை **(Entrance Examination)** எழுதினவர்கள் 325 பேர்.

இவர்களில் ஸெக்கண்டரி கிரேடு	...	40
எலிமெண்டரி ஹையர் கிரேடு	...	80
ஆக மொத்தம்	...	120

பேர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

*** *** ***

New Syllabus—புதுப் பாடத்திட்டம். போதனுமுறைப் பாடசாலைகளுக்கென்று புதிதாய் பாடத்திட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கத்தார் தீர்மானித்துள்ளனர். அதுவும் இந்த வருஷத்திலிருந்தே புது மாணவர்களுக்கு அனுஷ்டானத்திற்கு வரும். இந்த விஷயம் நமது வாசகர்களனைவர்க்கும் ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடும். இப்புதுத்திட்டம் முற்றிலும் நமது தொழில் முறையைச் சார்ந்தே அமைக்கப்பெற்றிருக்கும். ஆனதுபற்றி போதனுப் பயிற்சி சகல மாணவர்களுக்கும் இரண்டு வருஷப் படிப்பாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

எனவே சென்னை கல்வி இலாகா 110-ம் விதிப்படி ஹையர் எலிமெண்டரி கிரேடுக்கும் செக்கண்டரி கிரேடுக்கும் உரிய ஒரு வருஷப் படிப்பு ஷை புதுத்திட்டப்படி நிறுத்தப்பட்டு விட்டது. இதனுல், ஒரு வருஷப் படிப்புக்காக விண்ணப்பித்துக்கொண்ட அநேக விண்ணப்பதாரர்கள் தங்கள் படிப்பை நிறுத்திக்கொண்டது ஆச்சரியமல்ல. மேலும் அது அவர்களுக்கு மனக்கலக்கத்தையும் உண்டாக்கியது. அவ்வாறே,

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182463

கடைசி நேரத்தில் ஷை விஷயம் எங்களுக்குத் தெரிவிக்கப் பட்டபடியால் யாங்களும் கலக்கமுற்ருேம்.

இப்புதுத்திட்டப்படி பாடங்களும் முற்றிலும் மாறியிருக் கின்றன. இது ஹையர் கிரேடு மாணவர்களை வெகுவாய்ப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. அதாவது இனிமேலாக ஹையர் கிரேடுக்கு, (1) மனோதத்துவ சாஸ்திரமும் இளைஞர் கல்வியும் (Child Nature and Education). (2) பள்ளிக்கூட அமைப்புத் திட்டம் (Organisation). (3) பாஷை முதலிய இதர பாடங்களைப்பற்றிய போதனைமுறை (Methods) முதலிய பாடங்கள் உண்டு.

அன்றியும் செக்கண்டரி கிரேடு மாணவர்களுக்கு இது வரை கட்டாயப்பாடமாய் வைத்திருந்த சித்திரப்பாடம் (Drawing) இனி பாடசாலைப் பாடமாகவே கருதப்படுமாம்.

ஆயினும் இப்புதுத்திட்டம் நமது ஆசிரியத் தொழிலுக்கு முற்றிலும் பொருந்தியிருப்பதால் நமது புதிய ஹையர் கிரேடு மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என சந்தோஷிக்கின்ருேம். ஆனல் இப்புதுத்திட்டம் (New Syllabus) இன்னும் வெளி வரவில்லை. ஆகவே நமது இலாகா அதிகாரிகள் கூடிய சீக்கிரத் தில் அதை வெளிப்படுத்தி உதவுவர் என்று எதிர்பார்க்கிருேம்.

* * *

பாடசாலை வருஷத் தியானம்—வழக்கம்போல் நமது பாடசாலை வருஷத் தியானம் அடுத்துவரும் ஆகஸ்டு மாதம் 12, 13, 14, 15-ம் தேதிகளில் நமது பாடசாலையில் நடை பெறும். அவ்வமயம் தியானம் செய்ய விரும்பும் நமது பழைய மாணவர்கள் தங்கள் விருப்பத்தை முன்னதாகவே இப்பாட சாலைத் தலைமையாசிரியருக்கு எழுதித் தகவல் தெரிந்துகொள் ளக்கடவர். போஜன வசதி முதலிய செலவுகளுக்காக நமது பழைய மாணவர்க்கென்று குறைத்து பாதி சார்ஜ் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Proceedings of the Director of Public Instruction

R. C. No. 881—D/39 dated 4th Nov. 1939

1938-ம் ௵ ஏப்ரல்-௴ 25-ம் உ-ல் பிறந்த 1503-ம் நெ. உத்தரவின் (G. O.)-படி, ஸ்தல ஸ்தாபனங்களில் (Local bodies) சேவை புரியும் உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் யாதொரு சட்டசபைக்கு அபேக்ஷகர்களாக நிற்கவோ, அல்லது அபேக்ஷகர்களின் சார்பாக பிரசார வேலைகள் செய்யவோ, அல்லது சட்டசபைத் தேர்தலில் யாதொரு ராஜீய கக்ஷியில் சேர்ந்து எவ்வித வேலை செய்யவோ கூடாதென்றும்,

பின்னர் 1930-ம் ௵ ஜூன்-௴ 6-ம் தேதியில் பிறந்த மற்றொரு 1280-ம் நெ. உத்தரவின்படி திரவிய சகாயம் பெறும் கல்வி ஸ்தாபனங்களில் (Aided Educational Institutions) அதாவது (ப்ரைவேட் மானேஜ்மெண்டு பாடசாலைகள்) வேலை பார்க்கும் ஆசிரியர்களும்கூட ௸ நிபந்தனைகளுக்குக் கட்டுப் படவேண்டுமென்றும் ஏற்பட்டிருந்தது.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்டிருந்த ௸ பழைய உத்தரவு கள் பின்வருமாறு திருத்தப்பட்டிருக்கின்றன :—

இனிமேலாக, எயிடெட் கல்வி ஸ்தாபனங்கள் (Aided Educational Institutions) மட்டில் அவற்றில் சேவைபுரியும் சகல ஆசிரியர்களும் எந்தவிதமான ராஜீய கக்ஷியிலும் சாதா ரண பிரதான அங்கத்தினராகச் (Primary Members) சேர்ந்து அந்தந்தக் கக்ஷியின் சாதாரண நிர்மாண திட்ட வேலைகளைப் புரிந்துவரலாம். ஆனால் கக்ஷியில் உத்தியோகப் பதவிகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. தேர்தல் காலத்தில் பிரசார வேலை கள் செய்யக்கூடாது.

எனவே இப்புது உத்தரவின்படி ஆசிரியர்கள் அரசியல் கக்ஷி (Political Parties) அங்கத்தினர்களாக இருக்கக்கூடா தென்ற பழைய நிபந்தனைகளிலிருந்து விடுபட்டு, ராஜீய கக்ஷி அங்கத்தினராக இருக்கவும், தேர்தல் காலத்தில் வோட் (Vote) இஷ்டம்போல் கொடுக்கவும் சுதந்திரம் பெறுகின்றனர் என்பது தெளிவாகின்றது. ஆனால் கக்ஷிகளில் பதவிகள் பெற

லாகாதென்பதும், யாதாம் ஒரு கக்ஷிக்காக தேர்தல் காலங்களில் பிரசாரங்கள் செய்யக்கூடாதென்பதும் கவனத்துக்குரியனவாகும்.

இந்த புது உத்தரவு "கிருஷிகர்கள் சங்கம்" (Peasants' Unions) "தொழிலாளர் சங்கம்" (Labour Unions) போன்ற சங்கங்களுக்கும் பொருந்தும்.

Result of the T. S. L. C. Examination, Elem. Higher R. C. Boarding and Training Institution Trichinopoly 1940

[Fort St. George Gazette, dated 18th June 1940.]

1938-40

Reg. No.	Name	Date of Birth	Ed. Test	P. C.
16630	I. Arulandu	June 1919	VIII Std.	57
16631	S. Jegannathan	Sept. 1916	,,	39
16632	A. Soosaimanikkam	Oct. 1917	,,	45
16633	S. Antoniswami	Oct. 1917	,,	53
16635	T. Balaswami	Sept. 1918	III F.	51
16636	R. Baluswami	July 1921	VIII Std.	47
16637	A. Alexander	Nov. 1918	,,	42
16638	A. Savarimuthu	July 1921	III F.	54
16639	S. Maria Rethinam	Jan. 1916	VIII Std.	48
16640	S. Mudiappan	June 1918	III F.	56
16641	T. Rayappan	Sept. 1921	IV F.	50
16642	M. Ayalusamy	July 1919	VIII Std.	47
16644	A. J. Joseph	July 1920	,,	62
16645	M. Ignacy	June 1921	III F.	38
16646	G. Devasagayam	May 1918	,,	55
16647	M. Selvaraj	Nov. 1918	VIII Std.	51
16648	S. Thomas	Aug. 1913	,,	43
16649	P. Siluvai Pitchai	Apr. 1922	III F.	57
16650	T. Amirtham	June 1922	,,	54
16651	I. Cruz Ignatius	Mar. 1917	VIII Std.	40
16652	P. Deivanayagam Paul	Aug. 1916	,,	47
16653	S. Maria Thomas	June 1918	,,	51
16654	J. David Ponnusamy	July 1919	,,	49
16655	M. Jebamalai	Jan. 1919	III F.	55
16656	S. V. Rayappan	Sept. 1917	VIII Std.	49
16657	A. Adaikalam	Feb. 1920	,,	45
16658	R. Antonisamy	July 1921	,,	57
16659	M. Palanivalu *alias* Lawrence	Dec. 1916	III F.	51

Reg. No.	Name		Date of Birth	Ed. Test	P. C.
16660	P. Maria Rethinam		Mar. 1922	III F.	59
16661	M. Lourdu		Jan. 1914	IV F.	57
16662	S. Arulanandam		Apr. 1923	VIII Std.	47
16663	S. Arokiam		July 1915	V F.	47
16664	S. Arulappan Fernando		Mar. 1920	III F.	52
16665	M. S. Pakiam		Jan. 1920	IV F.	59
16666	M. Arpudaswami		Jan. 1918	VIII Std.	40
16667	D. Gnanapragasam		May 1920	,,	49
16668	G. Arulananthan		July 1919	,,	47
16669	A. Mariadas		May 1916	IV F.	48
16670	Neelamegam *alias* Rajendram		June 1922	VIII Std.	53
16671	S. Arokiaswamy		June 1917	,,	46
16672	M. Manickam		May 1922	,,	46
16673	G. Jeganathan		July 1919	III F.	54
16674	C. Bilavendirasami		Apr. 1916	VIII Std.	40
16675	L. Savarimuthu		June 1918	III F.	53
16676	A. M. M. Raphael		June 1919	IV F.	46
16677	S. Stanislaus		July 1919	III F.	43
16678	R. David		July 1918	VIII Std.	34
16679	A. Anthonimuthu		June 1921	,,	61
16681	M. A. Rayappan		July 1919	,,	45
16682	A. Michael		July 1921	,,	54
16683	S. Arogiasami		July 1918	,,	39
16684	A. Mudiyappan		July 1919	,,	36
16685	A. Maria Vedanayagam		July 1920	III F.	58
16686	M. Amalraj		Aug. 1923	VIII Std.	43
16687	G. Gurunathan		May 1921	,,	41
16688	G. Susaimarian		Apr. 1920	IV F.	50
16689	P. Antony		Apr. 1917	,,	51
16690	P. Anthonimuthu		Apr. 1920	,,	55
16691	P. G. Victor Rajiah		May 1923	VIII Std.	55
16692	S. Cruz Michael		June 1920	V F.	54
16693	R. Anthony Xavier		June 1914	III F.	52
16694	J. Chinnappan		Dec. 1921	V F.	58
16695	R. S. Irudayaraj		May 1917	,,	51
16696	V. Savariraj		Oct. 1918	IV F.	52
16697	N. Maria Michael		July 1918	VIII Std.	48
16698	G. Arulmarianaden		Nov. 1921	,,	57
16699	S. James		Mar. 1924	IV F.	57
16700	J. Koil Pillai		Mar. 1920	VIII Std.	56
16701	A. Barnabas		June 1917	III F.	36
16702	V. Irudayam		Aug. 1920	VIII Std.	45
16703	D. Antony		Oct. 1919	IV F.	51
16704	Maria Xavier *alias* Ponnulingam		Mar. 1917	VIII Std.	42
16705	J. Gnanapragasam	(S)	June 1922	V F.	55
16706	T. M. Samuel	(S)	May 1913	,,	46
16707	C. Anthonimuthu	(S)	July 1918	,,	54

1937-39

Reg. No.	Name	Date of Birth	Ed. Test	P. C.
16708	A. Maria Pragasam	July 1916	VIII Std.	41
17580	P. Soosai	Apr. 1917	III F.	34
	1936-38			
16709	A. Antonisami	Dec. 1913	„	38
16710	N. A. Arokiasami	Mar. 1918	„	42
16711	P. S. Pitchai	May 1918	„	46
	1935-37			
16713	P. Irudayasami	July 1917	„	32

FAILURES

1938-40

16643 S. Joseph, Failed in Elem. Mathematics and Nature Study.
16680 L. Ignacy, Failed in Elem. Mathematics.

Former Pupils

Passes

1937—39.

16708	A. Maria Prakasam	...	...	... 41
17580	P. Soosai	...	...	... 34
	1936-38			
16709	A. Antonisami	...	...	... 38
16710	N. A. Arokiasami	...	...	... 42
16711	P. S. Pitchai	...	...	... 46
	1935-37			
16713	P. Irudayasami	...	...	... 32

FAILURES

1937-39

17231	S. Divyanathan	...	Failed in Ely. Mathmatics.
17578	V. Mariadoss	...	„ „
	1936-38		
16712	A. Antonisami	...	„ „
17579	M. Maria Rajiah	...	„ „
	1935-37		
16819	Y. Santhanam	...	„ „
	1927-29		
16493	P. Adaikalam	...	„ „

செயல்முறை (Project method)

(*By* T. S. G.)

சிறுவர்கட்குக் கல்வி புகட்டும் விஷயமாய்ப் பல நவீன முறைகள் கையாளப்படுகின்றன. பிள்ளைகளின் இயற்கை சுபாவங்களை மதித்து அதற்கேற்ற முறைகளைக் கையாடுவதால் நிலை பெற்ற கல்வியறிவு அமையும் என்பதே புதுமுறைகளின் முக்கிய கருத்தாகும். மேலும் பிள்ளைகளது சுய முயற்சியால் கற்கும் விஷயங்களே அவர்களது மனதில் பதியும் என்பதும் அதிலடங்கும்.

பிள்ளைகளின் சுயமுயற்சிக்கு அவர்களது சுய நோக்கங்கள் நிறைவேறுவது முக்கிய காரணமாகின்றது. அன்றியும் அவர்கள் கற்கவிருக்கும் விஷயத்தின்பேரில் அவர்களுக்கு ஆவல் முதலாவதாகத் தோன்றவேண்டும்; பின்னர் ஊக்கம் குன்றாது வளரவேண்டும். இந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தூண்டவல்ல நவீன போதனுமுறைகளில் செயல் முறை (Project method) பிரதானமானதென மதிக்கப்படுகிறது. இந்த செயல் முறையின் முக்கிய அம்சங்களாவன :—

(1) பிள்ளைகளின் சுபாவ உணர்ச்சிகளை அடிப்படையாய்க் கொண்டு கல்வி புகட்டப்படுவது.

(2) பிள்ளைகளது சுய முயற்சியைக்கொண்டே கற்கவேண்டிய விஷயம் ஆராய்ச்சி செய்யப்படுதல்.

(3) அவர்களிடம் நற்பழக்கவழக்கங்கள் வளரும்படி செய்வது.

(4) ஜனசமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையில் பிள்ளைகள் வாழவேண்டியவர்களாதலின், அவ்விரண்டிற்குமுள்ள சம்பந்தத்தை அவர்கள் உணரும்படி செய்வது.

(5) எனவே தொழில் செய்வதின் அவசியத்தை வற்புறுத்துவது.

(6) செய்து கற்றலே (learning by doing) திறமையான கல்வி என்பதை உணர்த்துவது.

(7) ஒரு செயலிலிருந்து (Project) பாடசாலைப் பாடங்கள் எல்லாம் சம்பந்தப்படுவது. இதனால் பாடங்களின் பரஸ்பர சம்பந்தம் விளங்குவது.

(8) தேகம், புத்தி, மனம் இம்மூன்றும் ஒருங்கே வளரும்படி இது அமைவது முதலியன்வாம்.

மேலே கூறியவற்றைத் தெற்றென விளக்க இதனடியில் ஒரு மாதிரி செயல்முறைப் படிப்புவேலை காட்டப்பட்டிருப்பதைக் கவனித்தறிக :—

விஷயம் : உபயோகமுள்ள மரம், செடிகள்.

IV வகுப்பு.

1. சந்தர்ப்பங்கள் (situations)—பின் வருவனபோன்றவற்றுள் ஏதாவது இரண்டொரு சந்தர்ப்பம் ஏற்படுவதின் காரணமாக எழுகின்ற ப்ரச்னைகளிலிருந்து ஷெ விஷயத்தைச் செயல்முறையில் ஆராய்ச்சி செய்யத்தகும்.

மரத்தை ஒருவன் வெட்டுதல், ரம்பக்காரன் பலகைகள் அறுத்தல், தச்சன் தச்சுவேலை செய்தல், மரக்கடையில் மரவேலைப் பொருள்களைப் பார்த்தல், காற்றால் மரம் வேர் பெயர்ந்து கிடத்தல், வெள்ளத்தில் மரங்கள் அடித்துக்கொண்டு செல்லுதலைப் பார்த்தல். மரநிழலில் வெய்யிலுக்காகத் தங்குதல், வண்டிகள் வாகனங்களைக் கண்ணுறுதல், புஷ்பங்கள், கனிகள், விதைகள் முதலியவற்றைக் கடைத்தெருவில் பார்த்தல்—அல்லது அவற்றின் அழகிய படங்களைப் பார்க்க நேரிடுதல் முதலிய பற்பல சந்தர்ப்பங்கள்.

2. நோக்கம் (Purpose) :—

(1) பாடக்கிரமத்திலுள்ள (curriculum) சம்பந்தப்பட்ட பாடங்களைப் படிப்பதும்.

(2) நமக்குப் பிரயோஜனமுள்ள மரச்சாமான்—காய்கறி, கனிகள், விதைகள், எண்ணெய் வித்துக்கள், நார்வகைகள், மருந்துசாமான் முதலிய பொருட்கள் எங்கெந்த தாவரங்களினின்று கிடைக்கிறதென அறிந்துகொள்ளுதலும்.

(3) உழைப்பு, கைத்தொழில்—இவற்றின் சிறப்பை உய்த்துணர்தலும்.

(4) இட்ட வேலையைத் திட்டமாய்ச் செய்யவும், பொறுப்பு, வாய்ப்புடன் நடத்தும் திறமையடைதலும்.

(5) தாவரங்களின் விளைபொருட்கள், ஜன சமூகத்தினர்க்குப் பயக்கும் பற்பல நன்மைகளைக் கண்டு, அதனால் இயற்கைக்கும் சமூகத்திற்குமுள்ள சம்பந்தத்தைத் தெரிந்துகொள்ளுதலும்.

(6) இவைபோன்ற மற்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதும் ஆகும்.

3. ப்ரவேசம் அல்லது தொடக்கம் (Initiation)—பின்வருவனபோன்ற முயற்சிகளின் (activities) மூலமாய் விஷய ஆராய்ச்சியில், பிள்ளைகளுக்கு ஆவல், உற்சாகம், தொடர்ந்துசெய்யும் ஊக்கம் முதலிய குணங்கள் உண்டாகத் தூண்டுதல்.

(1) உல்லாசப் பிரயாணம்—தோப்பு துரவு, காடு கரை முதலிய இடங்களுக்குச் செல்லல். (ஏன்?)

(2) தச்சன் பட்டரை, மரச்சாமான் கடை, பழக்கடை, காய்கறித் தோட்டம், வீடுகட்டுமிடம், சந்தை முதலிய இடங்களைக் காணச்செல்லல்.

(3) குறிப்பு—(1) பார்த்தவற்றைப்பற்றி—பொருள் ஜாபிதா (List) எழுதிக்கொள்ளுதல்.

(2) உபாத்தியாயர் ஷை விஷயமாய்ப் பிள்ளைகளுக்கு, பொருட்கள், படங்கள் முதலியவற்றைக் காணும்படி உதவிசெய்தல்.

4. ஆசிரியரின் ஆயத்தங்கள் (Teacher's Preparation):—

(1) பாடசாலையிலுள்ள பற்பல மரச்சாமான்களைப்பற்றிக் கேள்விகளைப் போடுதல்.

(2) பற்பல தாவரங்கள், இலைகள் புஷ்பங்கள், பழங்கள் இவற்றின் படங்களைச் சேகரித்தல்.

(3) இலைகள், புஷ்பங்கள் இவற்றைப் பாடம்பண்ணி ஒட்டுவதற்காக, நோட்புத்தகம் (album) தயாரித்தல்.

(4) பிள்ளைகள் படம் வரைவதற்கான காகிதம், வர்ணம், எழுதுகோல் முதலியவற்றைச் சேகரித்தல்.

(5) காகித வேலை, கைவேலைகளுக்கான உபகரணங்களைத் தயார்செய்துகொள்ளல். வர்ணங்கள் தயாரித்தல்.

(6) களிமண் வேலைக்கு, களிமண் தயாரித்து வைத்தல்.

(7) தாவர விளைபொருட்களைப்பற்றிய விஷயங்களைப் புத்தகங்களிலிருந்தும், பத்திரிகைகளிலிருந்தும் திரட்டிவைத்துக்கொள்ளுதல்.

(8) இவைபோன்ற மற்ற முஸ்திப்புகள் செய்துகொள்ளல்.

5. பிள்ளைகளின் முயற்சி வேலைகள் (Pupils' activities):—

(1) பாடசாலைத் தோட்டத்தில் செடிகளை உற்பத்தி செய்யவேண்டுமெனத் தீர்மானித்து, ஏற்பாடுகள் செய்தல்—விதைகள் போட, பதியம் வைக்க, வெட்டி நட, பாத்திகள் தயாரிப்பு.

(2) தோட்டவேலை—பாத்திகளை அளக்கவும், எருவிடவும், பயிர்செய்யவும் வேண்டும்.

(3) கைவேலைகள்—களிமண்வேலை. பழங்களின் மாதிரி உருவங்கள் செய்து தகுந்த வர்ணங்கள் தீட்டுதல்.

(4) காகிதவேலை—வர்ணக்காகிதங்களைக்கொண்டு, கத்தரித்து பூக்களின் மாதிரிகளைச் செய்தல்.

(5) இலைகளையும், பூக்களையும் சேகரித்துப் பாடம்பண்ணி நோட்டுகளில் (album) ஒட்டுதல்.

(6) பொருள் உற்பத்தி—உதாரணம்: கருவேலாம் மரப் பட்டையிலிருந்து பற்பொடி தயாரித்தல். பருத்திச் செடியிலிருந்து, பஞ்சு எடுத்து நூல் நூற்றல். பல் துலக்கும் குச்சிகள் (ஆலம் விழுது, கருவேலம் குச்சிகள்) தயாரித்தல். கருவேலாம்-பிசின் (gum) புளிச்சை நார் போன்ற பற்பல உபயோகமுள்ள பொருட்களைத் தயாரித்தல்.

6. பயன் (Results) A. நற்பழக்க இயல்பு வளர்ச்சி (Habits) உழைத்துத் தொழில் புரிவதில் பழக்கம் அமைதல். எக்காரியத்தையும் பொறுப்புத்தன்மையுடன் செய்யப் பழகுதல். உற்சாகம், சுறுசுறுப்பு, ஒற்றுமை, தன்நம்பிக்கை, பிறரை நம்புதல் முதலிய குணங்கள் வளர்தல் முதலியன.

B. பாடசம்பந்தப் படிப்பு (Studies):—

வாசிப்பு (Reading)—மரங்கள், பழங்கள், விதைகள், மரவேலை, கைத்தொழில் சம்பந்தமான விஷயங்களைப் புத்தகங்கள், பிரசுரங்கள், பத்திரிகைகள் இவற்றினின்று எடுத்து வாசிக்கும்படி ஏற்பாடு செய்தல். விவசாய சம்பந்தமான பழமொழிகளைக் கற்றல். உதாரணம்: "ஆடிப்பட்டம் தேடி விதை", "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" "அகல உழுவதைவிட ஆழ உழு" "ஒழுக்கமே அறிவு, உழைப்பே திறமை" "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" முதலிய பற்பல பழமொழிகள்.

சம்பாஷணைகள் (Oral work)—ஷெ விஷயங்களி லிருந்து தயாரிக்கவும்.

எழுத்துவேலை (Written work)—பிள்ளைகள் செய்து வரும் ஷெ விஷயச் செயலை (Project) ஒட்டிய தினசரிக் குறிப்புகள் எழுதுதல். பாடசாலைத் தோட்டத்தில், செடிகளைப் பாதுகாக்கும் விதத்தைப்பற்றி விளம்பரங்கள் ஏனைய விவரணங்கள் எழுதிவைத்தல், தோட்ட வேலைக்கு வேண்டிய உபகரணங்கள் மற்ற பொருள்கள் தேவை என்று தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பம் எழுதுதல் போன்ற எழுத்து அப்பியாசங்கள் கொடுத்தல்.

கணிதம் (Arithmetic)—கஜம், அடிக்கோல்களை உபயோகித்தல், தோட்டத்தை அளந்து விஸ்தீர்ணம் கண்டுபிடித்தல், மணங்கு, சேர், பலம் முதலிய நிறுத்தலளவைகளின் சம்பந்தம், காய்கறிகள், பழங்கள் இவற்றை நிறுத்துப்பார்த்தல், இவற்றின் விற்பனை, கிரயம் சம்பந்தமான கணக்குகளில் அப்பியாசம், பாடக்கிரமத்திலுள்ள கணக்கு அப்பியாசங்களை இந்தமுறையில் சம்பந்தப்படுத்துதல். லாப நஷ்டக் கணக்குக்கு ஒரு உதாரணம்—மாதம் ஒன்றுக்கு ரூபாய்க்கு 2 பை வீதம் வட்டி சேர்த்துக் கொடுப்பதாக ஒருவன் ரூ. 250 கடன் வாங்கி, ஒரு பழத் தோட்டத்தை வாங்கினான். இரண்டுமாதம் சென்று அதை ரூ. 350-க்கு விற்றான். அவனுடைய லாபம் அல்லது நஷ்டம் என்ன ?

பூகோளம் (Geography)—சமவெளி, குன்று, மலை முதலிய ப்ரதேசங்களில் காணும் மரங்கள், அவற்றின் வளர்ச்சிக்கும், சீதோஷ்ண நிலைகளுக்கும் உள்ள சம்பந்தம், மழைபெய்யுமிடங்கள், ஷெ ப்ரதேசங்களில் தாவரங்களின் வளர்ச்சியின் வித்தியாசங்களுக்குக் காரணம் அறிதல்.

பழங்கள் எங்கெங்கிருந்து கிடைக்கின்றன, மரங்களை நதிகளின் மூலம் கொண்டுவருதல், போக்குவரவு சாதனங்கள், ப்ரதேசத்தின் ஏற்றுமதி இறக்குமதி, கைத்தொழில், வியாபாரம் நடைபெறும் விதம், காரணங்கள் ஆராய்ச்சி, சந்தையில் விற்பனைகள், மரவேலைச் சாலைகள் முதலியன.

இயற்கைப்பாடம் (Nature Study)–பற்பலவிதமான வேர்கள், அடிமரங்கள் அமைப்பு, இலைகளின் உருவங்கள், இலைகளின் வேலை, தாவர வளர்ச்சிக்கு வெளிச்சம் அவசியம். புஷ்பங்கள், பழங்கள் இவற்றின் பாகங்களைச் சோதித்தறிதல். இன்னும் பாடக்கிரமத்திலுள்ள பாடங்களுடன் சம்பந்தப்படுத்துதல்.

சுகவழி (Hygiene)—தாவரங்கள், ஆகாயத்தைச் சுத்தம் செய்வது, இரவில் மரத்தடியில் படுக்கக்கூடாது, வேப்பங் காற்று நல்லது, மர நிழல் ஆரோக்கியம் தரும், வீட்டின் முன் புறத்தில் பூச்செடிகள், கொடிகள் வைத்தல், அலங்காரம், தேக சுகம், தாவரங்களினின்று கிடைக்கும் மருந்து சாமான்கள், விதைகளினின்று கிடைக்கும் பொருள், வேப்ப எண்ணெயி லிருந்து ஸோப் செய்தல், ஒருவித மரப்பட்டையினின்று ஜுர மருந்து (Quinine from cinchona) பற்பல தைலங்கள், மரத் தின் பால், எருக்கம்பால், ஆலம்பால், இவற்றின் உபயோகம், பிசின்கள் (gums) பல் துலக்கும் குச்சிகள், ஆல், வேலாம் குச்சிகள் முதலியன இன்னும் இவைபோன்ற பற்பல உபயோக முள்ள பொருட்கள் தாவரத்தினின்று கிடைப்பதைப்பற்றி ஜாபிதா (list) தயாரிக்கவும்.

பார்புகழ் சாரணன் பண்பு பத்து

BY

R. கணபதி VI A. வேட்டைநாய் அணி

1. மற்றவர் நம்புதலும் வாய்மை வழுவாத
பொற்புறும் யோக்யப் பொறுப்பொடு—சற்குணமும்
யார்புகழ் நன்னடத்தை யாகிய யாவுமே
பார்புகழ் சாரணன் பண்பு.

2. நாட்டிற்கும் நண்பர்க்கும் நன்மை பயக்கின்ற
பாட்டிலும் ராச்சியத்தும் பார்க்குரிய—சட்டத்தும்
தேர்ந்த நெறிமுறை தேடல் கடைபிடித்தல்
பார்புகழ் சாரணன் பண்பு.

3. தன்னலமில்லாத தன்மையில் மற்றவர்
இன்னலுற் றக்கால் எளிதிற்றன்—இன்னலைப்
பார்க்கா துதவும் பரிவொடி யாவுமே
பார்புகழ் சாரணன் பண்பு.

4. யாவரே யாயினும் எச்சாதி யாகிலும்
யாவரும் நம் தேசத்தோர் என்றெண்ணி—பாவரும் நம்
சோதரர் என்றொழுகல் தூநீருடையுடுத்த
பார்புகழ் சாரணன் பண்பு.

5. அறவோ ரிடத்தும் முதியோ ரிடத்தும்
அறவாழி அந்தணன் ஆசான்—துறவோர் மற்
றோரிடத்தும் நல்லடக்கம் ஆர்தல் கடலுடுத்த
பார்புகழ் சாரணன் பண்பு.

6. மாக்களும் மக்களும் மற்ற வுயிரனைத்தும்
பூக்கண் ணொருபடித்தாய்ப் போற்றியே—நோக்கலும்
ஆரன்பு காண்பித்தலுமாய யாவுமே
பார்புகழ் சாரணன் பண்பு.

7. ஆன்றோர்க்கும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் ஆசிரியர்
போன்றோர்க்கும் மற்றப் புலவர்க்கும்—சான்றோர்க்கும்
யார்க்குமே கீழ்ப்படித லாகிய யாவுமே
பார்புகழ் சாரணன் பண்பு.

8. பெருநிரப்பே எய்தினும் பேசவொண்ணாத
அரந்தைவந் தாலும் அழியாச்—சிறப்புடை
பேருவகை யெய்துத லாகிய பீடேயிப்
பார்புகழ் சாரணன் பண்பு.

9. மக்களை வாட்டும் வறுமையோ செல்வமோ
மிக்கே துறினும் விழைந்தேற்றுச்—சிக்கனமாய்
ஓர்ந்து செலவாக்க லாகிய ஒன்றுமே
பார்புகழ் சாரணன் பண்பு.

10. உடையில் மனமொழி மெய்யில் உலக
நடையின் வாழ்வினில் நற்பூ—வுடையார்சொல்
ஏரினில் பரிசுத்தமாகிய எல்லாமிப்
பார்புகழ் சாரணன் பண்பு.

(*Findlay High School Magazine.*)

காவியத்தில் ஓவியம்

M. A. S. Udayar, Tamil Pandit.

N4031

(கொத்து 30, மலர் 12, 254-ம் பக்கத்தொடர்ச்சி)

திருவளர் தோற்றச் செம்மைகளெல்லாம் உருவளந் தோன்ற உணர்ச்சியுட்பெருக கண்டவர்கண்ணினை களிப்புறச் செய்யும் எண்டருவளம்பலவியைந்த ஓவியம்போற் கேட்டவர் தாமுங் கிளர்செவி கண்ணு வாட்டமின்றுணர வரைந்தளித் துயர்ந்த ஆரமாந் தேம்பாவணி யளித்தருளிய வீரமாமுனிவர் விரிவுறப் புனைந்த காவியத்துள்ளே காண்டகு புகழ்மலி ஓவியம் பற்பல உயர்ந்தனவவற்றுள் ஈண்டிம்மலரினென்றியம்புதும்:—

செஸார் என்ற இராயன் ஓர்கால் தன் ஆட்சியுள்ளமைந்த மக்களின் எண்ணிக்கையை யுணர்வான் விரும்பி "நம்மாட்சிக் குட்பட்டார் அனைவரும் அவரவர்க்குரிய பிறப்பகம் சென்று தம் எண்ணிக்கையும், குலமுறையும், இறைப்பொருளும் கொடுப்பீராக" என்று பறையறைவித்தானாக, அச்சொல் செவியுற்ற, மாசறுமொண்டவச் சூசைமாமுனிவரன், இறையவனருளாலெய்தப்பெற்ற, கறைசிறிதில்லாக் கன்னிமரியை, அன்னவன் பணியாலன்புடனுடன்கொடு சென்னெறிய தன்கட் சிறந்த ஓர் பகுதியை இன்று நம்மகக்கணால் இன்புற நோக்குமாறு சித்திரித்த சித்திரம் வருவாறு:—

தவிதிறைகுலத்தின்றவவரசாய சூசைமாமுனியும் பவநிழலணுகாப்பண்பினிற் சிறந்த கனிமரியும் பெத்திலேம் என்னும் பெரும்பதிநோக்கி வழிநடக்கின்றனர். பெரியவர் வருகையேற்கும் பெற்றிபோலக் குயில்கள் காளமியம்பின. மயில்கள் நடம் புரிந்தன. வண்டினங்கள் பண்மிழற்றின. இத்தகைய வரவேற்பினூடே சூசைமாமுனிவன் துணையவளோடு சென்றனன். இன்னவர் தம் வருகையைக் காண்பது என்னும் பெயராற்றமது நடையெழில்காட்டுவான் தூயவன்னங்கள் பற்பல போந்தன. அவ்வாறு போந்தவன்னங்கள் பூரணத்தினைப் பொற்பதம் பூண்ட ஆரணங்காய அன்னையாள்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182463

கண்டு நம் நடையிங்ஙன் கடையுடைத்தாமெனக் கருத்துற நாணி அயலகம் சென்றன. இக்காட்சியை யுணர்த்தும் சித்திரமாவது.

> “கொம்பினுர்குயில் கூவவுமஞ்ஞைகள்
> பம்பியாடவும் பைஞ்சிறைத்தேனெடு
> தும்பிபாடவுந் தூயன நாணவும்
> நம்பிமாதொடு நன்னெறிபோயினன்.”

இதன் பொழிப்பு வருமாறு :—

கிளைகள்தோறு மிருக்குங் குயில்கள் கூவிக்கொண்டிருக்கவும் மயில்கள் கலாபம் விரித்து ஆடிக்கொண்டிருக்கவும் அழகிய சிறகுகளையுடைய பெண்வண்டுகளுடனே ஆண்வண்டுகள் பண்பாடவும், தூய்மையாகிய அன்னப்பறவைகள் இவ்விருவரையும் கண்டு இக்கனிநடைக்கு யாங்தோற்றேம் என நாணமுறவும், ஆண்களிற் சிறந்தோனுகிய சூசைமாமுனிவன் தன் துணைவியாகிய மரியாளுடன் நல்ல வழிகளைக் கடந்து சென்றான் என்பது. இதனுள்.

வளன், மரி இவ்விருவரையும் பெரியோராகவும், அன்னங்களை அவர்களை வரவேற்போராகவும், குயில்களைக் காளமூதுபவராகவும், மயில்களை நடனமாதராகவும், வண்டுகளைப் பாடகராகவும், சோலையை நடனசாலையாகவும் வனைந்துகாட்டிய கவிச்சித்திரம் வருணித்தற் கியல்வனவல்ல.

குறிப்பு: சென்ற ஜூன்-மீ வெளியான “காவியத்தில் ஓவியம்” என்பதான கட்டுரையில் வந்த செய்யுளின் ஒவ்வொரு முதலடியிலும் கருகருவென, ஞருஞருவென, புருகுருவென, அருதுரு, என்பதற்குப் பதிலாக, முறையே, கரு கருவென, ஞரு ஞருவென, புருகுருவென, அருதுரு-எனத் திருத்தி வாசிக்கவும். அதுவே பொருத்தம். பிழை நிகழ்ந்தமைக்கு மிக்க வருந்துகின்றேம்.

உபாத்தியாயர் :—கையில் ஓட்டை எடுத்துக்கொண்டு இது என்னடா ?

பையன் :—ஓடுங்க சார்.

உபாத்தியாயர் :—அட பயலே பத்திரம் எங்கடா ஓடுகிறது.

பாடக் குறிப்பு

(V. Savaridoss.)

வகுப்பு : II   பாடம் : கணக்கு.   நேரம் : 30 நிமிஷம்.

நோக்கம் : 100-க்குள் பிரித்துக் கூட்டல் போதித்தல்.

உபகரணம் : பத்துப்பத்தாகச் சேர்த்துக் கட்டப்பட்ட குச்சிக்கட்டுகள், தனிக்குச்சிகள், பத்து வஸ்துக்கள் அடங்கிய பெட்டிகள், பைகள் தனிவஸ்துக்கள்.

முன்னறிவு : 100 வரை எண்குறிப்பு, இரண்டு ஸ்தான எண்களின் இடமதிப்பு, ஒன்றுகளைத் தொகுத்துக்கூட்டல்.

பீடிகை : 1. தொண்ணூறு, அறுபத்தேழு, முப்பத்தாறு, இவ்வெண்களை எழுது.

2. 47,36,53,75 இவற்றில் எத்தனை பத்துக்கள் எத்தனை ஒன்றுக்கள்.

3. முதல் சீப்பில் 8 பழங்களும், 2-வது சீப்பில் 6 பழங்களும், மூன்றாவது சீப்பில் 7 பழங்களுமிருந்தால் அச்சீப்புகளிலுள்ள மொத்தப் பழங்கள் எத்தனை ?

4. பீட்டருக்கு அவன் தாயார் 9 மிட்டாய்களும், தகப்பனார் 7 மிட்டாய்களும், அண்ணன் 8 மிட்டாய்களும் கொடுத்தால், பீட்டருக்குக் கிடைத்த மொத்த மிட்டாய்கள் எத்தனை ?

5. நான் ஜானுக்கு 6 கோலிகளும், பவுலுக்கு 4 கோலிகளும், அந்தோனிக்கு 7 கோலிகளும், வின்சென்டிற்கு 5 கோலிகளும் கொடுத்தேன். நான் நான்குபேருக்கும் கொடுத்த மொத்தக் கோலிகள் எத்தனை ?

மேலே கண்ட பீடிகைக் கேள்விகள்மூலம் பிள்ளைகளின் முன்னறிவைச் சோதித்து நோக்கத்தை வெளியிட்டுப் பாடத்தை துவக்குதல்.

விஷயம்	முறை

விஷயம்

மாதிரிக்கணக்கு:

ஒரு பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் 28 பிள்ளைகளும், இரண்டாம் வகுப்பில் 37 பிள்ளைகளும், மூன்றாம் வகுப்பில் 29 பிள்ளைகளும் வாசிக்கிறார்கள் என்றால் அம்மூன்று வகுப்பிலும் சேர்ந்து படிக்கும் பிள்ளைகள் எத்தனை பேர்.

முறை

கணக்கைப் பிள்ளைகள் அறியும்வண்ணம் தெளிவாகச் சொல்லிய பின்னர், முறையே ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனை பிள்ளைகள் வாசிக்கிறார்கள் என்று வினவுதல். மொத்தத்தைக் கண்டுபிடிக்க 28, 37, 29 இவற்றைக் கூட்டவேணுமென்று வருவித்தல்.

கட்டுகள்	தனிக்குச்சிகள்
2	8
3	7
2+2	9
9	4

=94 குச்சிகள்.

பின்னர் பிள்ளைகளுக்குப் பதிலாக உபகரணங்களைக் கையாடி மொத்தம் கண்டுபிடிப்போமென்று சொல்லி, 28 பிள்ளைகளுக்குப் பதிலாக 2 கட்டுக் குச்சிகளையும் 8 தனிக்குச்சிகளையும், 37 பிள்ளைகளுக்குப் பதிலாக 3 கட்டுக் குச்சிகளையும் 7 தனிக் குச்சிகளையும், 29 பிள்ளைகளுக்குப் பதிலாக 2 கட்டுக் குச்சிகளையும் 9 தனிக் குச்சிகளையும் எடுத்து வைத்தல். தனிக்குச்சிகள் எத்தனை என்று கண்டுபிடிக்கச் சொல்லுதல். 9+7+8=24 அவற்றைப் பத்

<table>
<tr><th>விஷயம்</th><th>முறை</th></tr>
<tr><td></td><td>துப்பத்தாகக் கட்டினால் 2 கட்டுகளும் நான்கு தனிக்குச்சிகளுமிருக்கின்றன. 2 கட்டுகளையும் கட்டுகளோடு சேர்த்துக் கொண்டு மொத்தக் கட்டுகள் எத்தனை என்று கண்டுபிடிக்கச் சொல்லுதல். கட்டுகள் 2+2+3+2=9 கட்டுகள் ஆகின்றன. ஆகவே 9 கட்டுகளும் 4 தனிக் குச்சிகளும் சேர்ந்து 94 குச்சிகள் ஆகின்றன. இவ்விளக்கத்தின் மூலம் அம்மூன்று வகுப்புகளிலுமுள்ள மொத்தப் பிள்ளைகள் 94 பேர் என்று வருவித்தல்.</td></tr>
<tr><td>
<table>
<tr><th></th><th>ப.</th><th>ஒ.</th></tr>
<tr><td>முதல் வகுப்பிலுள்ள பிள்ளைகள்</td><td>2</td><td>8</td></tr>
<tr><td>2-வது ,, ,,</td><td>3</td><td>7</td></tr>
<tr><td>3-வது ,, ,,</td><td>2</td><td>9</td></tr>
<tr><td>ஆக மொத்தம்</td><td>9</td><td>4</td></tr>
</table>
மூன்று வகுப்புகளிலுமுள்ள மொத்தம் பிள்ளைகள் 94 பேர்.
</td><td>சுருக்கமாய்க் கணித்தல் :
பிறகு சுருக்கமாகச் செய்வோமென்று சொல்லி, உபகரணங்களை நீக்கிவிட்டு விஷயத்தில் கண்டபடி ப. ஒ. காலங்கள் வரைந்து முறையே 28, 37, 29 இவற்றைப் பத்துகளாகவும் ஒன்றுகளாகவும் மாணவர்களைக் கொண்டு பிரித்துக் காலங்களில் குறித்தல். ஒன்றுகளைக் கூட்டச் சொல்லுதல் 9+7+8=24. 24-ல் 2 ப. 4 ஒ. இருக்கின்றன. 4 ஒன்றுகளை ஒன்றன் கலத்தில் கீழே குறிக்கவும். 2 பத்துக்களைப் பத்துக்களோடு சேர்த்துக் கூட்டச் சொல்லுதல். 2 ப.+2 ப.+3 ப.+2 ப.=9 ப. 9 பத்துக்களை பத்தின் கலத்தில்</td></tr>
</table>

விஷயம்	முறை
	கீழே குறிக்கவும். ஆக மொத்தம் 9 ப. 4 ஒ. அதாவது 94. மொத்தப் பிள்ளைகள் 94 என்று வருவித்தல். மேலே கண்ட இரண்டு முறைகளில் 2-வது முறையில் ஷெ கணக்கைச் செய்வது சுலபமாயிருக்கிறதென்பதை வருவித்து அதன்படி கணக்குகளைச் செய்ய வற்புறுத்தல்.

பரீட்சை

1. ஒருவன் தமிழில் 24 மார்க்குகளும், கணக்கில் 39 மார்க்குகளும், பொதுஅறிவில் 28 மார்க்குகளும் வாங்கினுன். அவன் வாங்கிய மொத்த மார்க்குகள் எத்தனை?

2. ஒரு பசுவின் விலை ரூ. 45, ஒரு எருமையின் விலை ரூ. 25, ஒரு ஆட்டுக்கடாவின் விலை ரூ. 12. மூன்றும் சேர்ந்து என்ன விலை?

3. ஒருவர் தன் முதல் பிள்ளைக்கு ரூ. 35-ம், இரண்டாவது பிள்ளைக்கு ரூ. 25-ம், மூன்ருவது பிள்ளைக்கு ரூ. 19-ம், 4-வது பிள்ளைக்கு ரூ. 15-ம் கொடுத்தார். நான்கு பேர்களுக்கும் கொடுத்த மொத்த ரூபாய் எவ்வளவு?

க. ப. சு.

	ப.	ஒ.
முதல் வகுப்பிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை...	2	8
2-வது ,, ,, ,, ...	3	7
3-வது ,, ,, ,, ...	2	9
ஆக மொத்தம் ,, ...	9	4

∴ மூன்று வகுப்புகளிலுமுள்ள பிள்ளைகள் மொத்தம் 94 பேர்.

கல்வித்துறையில் கற்கும் கைவேலைகள்
(Educational Hand Work)

S. G. Naidu, *Manual Training Instructor.*

(கொத்து 30, மலர் 12, பக்கம் 270-ன் தொடர்ச்சி)

Exercise 3. கத்திக்கப்பல் :

Exercise 2-ல், stage II-ல் மடித்திருக்கும்மாதிரி மடித்து, அதில் தலைப்புப்பக்கம் நோக்கி நிற்கும் மூலையில் இருக்கும் 4 இதழ்களில் மத்தியில் இருக்கும் இரண்டு இதழ்களை விட்டுவிட்டு, பக்கங்களில் இருக்கும் இதழ்களை மாத்திரம் முன்போலவே இருபக்கங்களிலும் மடித்து விட்டு, பிறகு மத்தியில் நிற்கும் இரு இதழ்களையும் முன்போல ஏதாவதொருபக்கம் மடிக்காமல் மத்தியிலேயே மடித்து நுழைக்கவும். பிறகு பிளவுள்ள பாகத்தை முன்போலவே (சாதாரணக்கப்பல்) AB மடிப்புவிழும்படி மடித்து அதன் கீழ்ப்பாகத்தைப் பிய்த்து விட்டால் அது ஒரு கத்திக்கப்பலின் உருவத்தை அடைகிறது.



மூலைக்குமூலை (diagonal) மடிப்புகளினால் உண்டாகும் மாடல்கள் மைக்கூடு, ஏரோப்பிளேன் முதயலிவை

Exercise 4. மைக்கூடு :

Stage I. Stages II & III. Stages IV & V.



Stage I-ல் காட்டியமாதிரி ஒரு சம சதுரமான காகிதத் துண்டை எடுத்து மூலைக்குமூலை (diagonals) மடிக்கவும். பிறகு அதை Stages II & III-ல் காட்டியமாதிரி மடித்து A என்னும் பாகங்களை B என்னும் பாகங்களின்மேல் மடிக்கவும். பின்னர் C என்பவைகளை D என்பவைகளைப்போல் Stages IV & V-ல் காட்டியமாதிரி மடித்து, D-ன் கீழ்புறத்து பிளவுகளில் கீழ் நோக்கி நிற்கும் மூலைகளை நுழைத்துவிடவும். இப்பொழுது

துவாரம் ஏற்பட்டிருக்கும் மேல்பக்கத்தில் ஊதினல் ஒரு மைக்கூடு உருவத்தை அடையும். அவ்வுருவத்தையே ஓரங்களில் பட்டையாக மடித்துவிட்டு அதைப் பாலர்கள் கண்ணாடி மைக்கூடு என்றும் சொல்லுவார்கள். ஷை மைக்கூடுகளில் தண்ணீர் ஊற்றி விளக்கில் காய்ச்சினல் காகிதம் எரிந்துவிடாமல் தண்ணீர் சூடாவதையும் பிள்ளைகளுக்குக் காட்டலாம்.

Exercise 5. ஏரோப்பிளேன் :

மைக்கூடு செய்வதற்கு மடித்த Stages II & III-போல் மடிக்கவும். பிறகு படத்தில் 1, 2 என்று காட்டியிருப்பவைகளைப்போல் மடித்து, AB புள்ளிகோட்டின் (.........line) மேல் பின்புறம் மடிக்கவும். பிறகு ஒரு நீண்ட சதுரமான காகிதத் துண்டை எடுத்து Stage III-ல் காட்டியமாதிரி முதலில்

Stages I & II.



Stage III.



செய்த ஏரோப்பிளேன் தலைப்புறத்தில் இந்த நீண்ட சதுரக் காகிதத்துண்டை நுழைத்தால் அது ஏரோப்பிளேனின் வாலைப்போல் தெரியும். சில சிறுவர்கள் இந்த மாடலை ஒரு பறவை என்றும் சொல்வார்கள். (A என்பது Stages I & II-ல் மடித்தது. B தனியாய் நுழைத்திருக்கும் வால் காகிதத்துண்டு) சில சிறுவர்கள் இதை காற்றடிக்கும்பொழுது மேலே தூக்கி எறிந்து, அது பறவைபோல் பறப்பதைக்கண்டு மகிழ்வர். இனி நீண்ட சதுரக்காகிதங்களினல் செய்யும்,நாலுகப்பல், இரட்டைக்கப்பல், வீடுமுதலியவைகள் அடுத்த மலரில் தோன்றும். (தொடரும்)

இயற்கைப் பாடம்: ரப்பர்

(கொத்து 30. மலர் 12. பக்கம் 272-ன் தொடர்ச்சி)

U. A. Dass.

VIII. ரப்பர் தயார் செய்தல்

நீராக்கி வடிகட்டின ரப்பர் பாலில் சாதாரணமாக 15 முதல் 25 சதவிகிதம் வரை ரப்பர் உண்டு. இந்தப் பாலை தட்டுகளில் ஊற்றி சில இரசாயன மருந்துகளைக் கலக்க ரப்பர்மட்டும் வெண்ணிறமான ஆடையைப்போல் மேலே படரும். இதை இரும்பினால் செய்யப்பட்ட வர்த்தன இயந்திரத்தில் (iron rollers) வைத்து அழுத்தி, எடுத்து உலரும்படி மேலே தொங்கவிடுகிறார்கள். இது காற்றினால்மட்டும் உலர்த்தப்படுகின்றது. ஓர் வாரத்திற்குள் உலர்ந்து சிறிது மங்கின பழுப்பு நிறத்தை அடைகின்றது. இதற்கு (Crepe rubber) என்று பெயர்.

ஷை முறையில் அழுத்தப்பட்ட ரப்பரை 14 நாட்கள்வரை நெருப்புப் புகையால் உலரும்படி விடுகின்றனர். முழுதும் உலர்ந்ததும் கரும்பழுப்பு நிறத்தை அடையும். இதற்கு ஷீட் ரப்பர் என்று பெயர். (Sheet rubber.)

ரப்பரையும் கந்தகத்தையும் சேர்த்து அதிகமாய் சூடுபடுத்தினால் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து வல்கனைஸ்டு (Vulcanized) ரப்பர் ஆகின்றது.

செவ்விந்தியர் ரப்பர் தயார் செய்யும் முறை முழுதும் வித்தியாசமானது. இவர்கள் ரப்பர் பாலைச் சுத்திசெய்வது கிடையாது. ஓர் மரத்துண்டை அவர்கள் பாலில் தோய்த்து புகையினால் உலர்த்துகிறார்கள். இவ்விதமாய் ரப்பர் ஓர் பெரிய பந்து ஆகின்றவரை செய்கின்றனர். இவ்விதமாய் சாதாரண முறையில், சுத்தி செய்யாமல், தயார் செய்யப்படும் இந்த ரப்பரை உலகத்தார் அவ்வளவாக விரும்பாதது இயற்கையே.

IX. ரப்பரின் தன்மை

ரப்பர் தண்ணீரிலாவது, லவணசாரத்திலாவது (alkali) மற்ற திரவங்களிலாவது கரையாது. ஆனால் கல்லெண்ணெய்யிலும், (petrol) இன்னும் சில இரசாயன பொருட்களிலும் கரையும்,

வல்கனைஸ்டு ரப்பர் அதிக உறுதியானது. வெகுவாக நீளக் கூடும். வித்தியாசமான சீதோஷ்ணத்தால் மாறுபாடடையாது. சாதாரணமாக கரைக்கத்தக்க எந்த பொருளிலும் கரையாது.

X. ரப்பரின் உபயோகம்

வல்கனைஸ்டு ரப்பரின் உபயோகத்தைக் கவனிக்குங்கால் சாதாரண ரப்பரின் உபயோகம் அவ்வளவு அதிகம் அல்ல, மிகக் குறைவே. சாதாரண ரப்பரின் முக்கிய உபயோகங்களாவன :—ரப்பர் பசை, கெட்டியாகப் பற்றக்கூடிய இரணவைத்திய சம்பந்தமான நாடாக்கள், மின்சாரத்தைத் தடுக்கக்கூடிய ரப்பர் நாடா முதலியன, செருப்புகளின் அடிக்கிடும் கிரேப்தோல்.

ஆனால் வல்கனைஸ்டு ரப்பர் ஆயிரம் வகையில் பயன்படுகின்றது. அதில் அதிக முக்கியமானது மோட்டோர் டயர். கெட்டி ரப்பரால் ஊற்று மை எழுதுகோல்கள், சீப்புகள், பொத்தான்கள் செய்யப்படுகின்றன. இவ் ரப்பரை தளத்திற்கு உபயோகிக்கலாம்; வெகுகாலம் நீடிக்கும், வழுக்கும் தன்மை இல்லை. ஆனால் இதன் விலை சதுர கஜத்திற்கு ரூ. 100.

OUR EMPLOYMENT BUREAU

The following Managements are in need of Trained Teachers. Our unemployed junior pupils may send in their applications direct to the Managements.

Secondary Grade Teachers Wanted in :

1. Rev. Father S. David, S. C., *Chetpat, Polur P.O., North Arcot.*
2. The Manager, *The Good Shepherd H. E. School, St. Michael's Cathedral, Coimbatore.*
3. The Manager, *Sri Krishna Vilas H. E. School, Kalangani, Puduchathram P.O., Salem Dt.*
4. The Parish Priest, *R. C. Mission, Kalapalur, (Via) Erode & Gobi., Coimbatore Dt.*
5. The Manager, *St. Anthony's Boys' H. E. School, Negapatam.*

Higher Ely. Trained Teachers Wanted in :

1. St. Anthony's Boys' School, *Negapatam.*

பழைய ஞாபகங்கள் நே. 1

"மின்ஸாரத்தின் மகிமைதான் என்னே!"

A. Nargunam

"இடும்பைகூர் மின்ஸாரமே! உன்னோடு வாழ்தலரிது," யென்று இப்பொழுது நான் அடிக்கடி எனக்குள் சொல்லிக் கொள்வதுண்டு. மின்ஸாரத்தைப்பற்றி இப்படி எனக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட ஒரே ஒரு சம்பவம்தான் காரணம். இது ஒரு பழைய ஞாபகம்! பொதுவாக பாடசாலைப் பயிலும் மாணவருக்கும், குறும்புத்தனத்திற்கும் நெருங்கிய உறவு உண்டு என்று யாவரும் அறிவர். ஒரு தனிப்பட்ட மாண வனின் குணம் எவ்வளவுதான் சிறந்ததாயிருந்தாலும், அவன் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டுவிடுவானானால், அந்த "க்ரூப் மைண்ட்" (group mind) என்று ஒன்று இருக்கே, அதனால் வசீகரம் செய்யப்பட்டு பலவித குறும்பு சேஷ்டைகள் செய்ய முற்பட்டுவிடுகிறான். ஒரு சமயம் பாருங்கள்!

படிக்கும் அறையில் எல்லோரும் அமர்ந்து 'கம்' மென்று வாசித்துக்கொண்டிருக்கிறோம். "கீச்சு மூச்சு" என்ற சப்தம் கிடையாது. நேரம் இரவு. மின்ஸார விளக்கு துல்யமாய் பிர காசித்துக்கொண்டிருக்கிறது. திடீரென்று எல்லா மின்ஸார விளக்குகளும் தமது அபார லீலா விநோதங்களைக் காட்ட ஆரம்பித்துவிடுகின்றன. திடீரென்று "பளிச்" சென்று ஒளி விடுவதும், திடீரென்று மங்குவதுமாகயிருக்கின்றன. உபத் ரவம் பொறுக்கமாட்டாமல், ஒரு மாணவர், "உச், உச், இதென் னப்பா, பெருஞ்சனியனாய் இருக்கு! மனுஷன் படிப்பதா, கண் கெட்டு குட்டிச்சுவராய்ப்போவதா?" என்று மின்சாரத்தைப் பார்த்து சீறி விழுகிறார். மற்றும் சிலர், "உகும், உம், உம்," என்று ஓலமிட ஆரம்பிக்கிறார்கள். திடீரென்று மின்ஸார விளக் குகள் முழுதும் அணைந்துவிடுகிறது. பார்த்துக்கொள்ளுங்க ளேன்! "ஆ, ஊ," என்ற ஒரே சப்தம்! "ஏய், யார் பேசரது? பேசரவன் வெளியே வெளிச்சத்தில் போய் பேசு," என்று மேஜையைத் தட்டிப்பேசும் "பிரிபெக்டின்" குரல் கேட்

கிறது ஒருபக்கம். எங்கும் மையிருட்டு! இப்பொழுதுதான் அந்த "group mind" என்பது என்னைக் கிண்டல் பண்ண தூண்டிவிட்டது.

நான்பாட்டு இருட்டில் குறுக்கு நெடுக்குமாக ஓடுவதும், நண்பர்களுடைய பாடப் புத்தகங்களை எடுத்து ஒளிப்பதும், "மின்ஸார விளக்குக்கு ஜே! மின்ஸாரத்தின் மகிமைதான் என்னே!" என்று ஓலமிடுவதுமாய் இருந்தேன். கடைசியாக எங்கிருந்தோ ஒரு துண்டு "மெழுகு வத்தி" கிடைத்தது. அதை வெகு அக்கறையாகக் கொளுத்தி படிக்க ஆரம்பித்தேன். ஒரு இருபது நண்பர்கள் அதைச் சூழ்ந்துகொண்டார்கள். "பூ" என்று ஒரே ஊதாய் ஊதி வத்தியை அணைத்துவிட்டு, "கும், கும், டகடா, டக், டகடா," என்று என் டெஸ்கின்மேல், தாளம் போட்டுக்கொண்டு, "தீன கருணாகரனே, நடராஜா!" என்ற பாட்டை ஆரம்பித்தேன். "சார்! சார்! வேண்டாம், ஸார்! 'பிரிபெக்ட்' கோபிச்சுடுவார், பேசாமயிருங்க, சார்" என்றார் எதோ ஒரு நண்பர் இருட்டில். "சும்மாயிருங்காணும், அவர் யிங்கே யெங்கே, ஸார், வரப்போகிறார்? ஆ, கும், கும்க், கும்க்," என்று மறுபடி ஆரம்பித்தேன். "அடடா! இந்த மின்ஸாரத்தின் மகிமைதான் என்னே!" மனுஷனுக்கு எவ்வளவு உற்சாகத்தை ஒரு நிமிஷத்தில் ஊட்டிவிட்டது! இதேபோல, தினம் ஒருதடவை, 'off' ஆகிவிட்டால், ரொம்ப ஜோராய் இருக்கும், சார்!" என்றேன் நான் அந்த நண்பரிடம் மறுபடியும்!

'பளிச்' சென்று எல்லா மின்ஸார விளக்குகளும் ஒரே பிரகாசமாய் எரிய ஆரம்பித்தன. இருந்த சப்தமெல்லாம் எங்கேயோ போய்விட்டது! மறுபடியும் எங்கும் ஏக மௌனம்! என்னை யிருட்டில் சுற்றியிருந்த நண்பர்கள் ஒருவரையுங் காணோம். என் எதிரில் 'பிரிபெக்ட்' நிற்கிறார். அவர்தான் என்னுடன் சற்று நேரத்துக்குமுன் பேசியவர்! இந்த அழகில், எதோ ஒரு நண்பர், எனக்கு இருட்டில் 'வெள்ளை மீசை' வைத்துவிட்டார். எல்லோரும் ஏக கலாட்டா பண்ணிவிட்டார்கள் போங்கள், சார்! பிரிபெக்டும், "இதென்னப்பா, பெரிய கோமாளிபோலிருக்கு!" என்று சிரித்துக்கொண்டே போய்விட்டார்! என் முகத்தில் அசடு தாண்டவமாடிற்று. இன்னும் சில பழைய ஞாபகங்கள், அடுத்த இதழில்.

துண்டு துணுக்குகள்

(N. Mariamichael, Old boy.)

1. விவசாயப் பழமொழிகள்

உழவு

1. உழவால் பயிராகிறது எருவாலுமாகாது.
2. அகல உழுவதை ஆழ உழு.
3. அடர விதைத்து ஆழ உழு.
4. அழுதுகொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு.
5. சாண் உழவு முழ எருவிற்குச் சமம்.
6. தை உழவு ஐயாட்டுக் கிடை.
7. உழுத சேறு காய்ந்தால் உழக்கு நெல்லுங்காணாது.
8. உழவு நட்பில்லாத நிலமும்
   மிளகு நட்பில்லாத கறியும் வழ வழ
9. உழுகிற நாளில் ஊர்விட்டுப்போனால்
   அறுக்கிறநாளில் அரிவாள் தேடவேண்டாம்.
10. ஏராலே சேறாக்கி
    எருவாலே கருவாக்கி,
    நீராலே பைங்கூழை,
    நிலைப்பில் பார்த்தமையன்றி,
    காராலே காவிரி நதியாலே,
    காசினியில் ஆறாலே
    பசி தீர்வார்—அகநிலத்திற் பிறந்தோரே!

2. பெரியன மூன்று

கடலிற் பெரிது :—

பயன் தூக்கார் செய்த உதவி
நயன்தூக்கின் நன்மை கடலிற்பெரிது.

மலையிற் பெரிது :—

நிலையில் திரியாதடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

ஞாலத்திற் பெரிது :—

காலத்தினாற் செய்தநன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது. —திருக்குறள்.

எமது பாடசாலை நிகழ்ச்சிகள்

12–6–'40 கோடை விடுமுறைக்குப்பின், இன்று பாடசாலை தொடங்கியது. ஆசிரியர்களும், ஆசிரிய மாணவர்களும், மாதிரிப் பாடசாலைப் பிள்ளைகளும், எமது பாடசாலை சபாமண்டபத்தில் (Assembly Hall) ஒன்றுகூடினர். சங். தலைமை ஆசிரியர் கடந்த வருஷாந்திரப் பரீட்சை முடிவைப்பற்றிக் கூறி, பரீட்சையில் தேறின மாணவர்களது வகுப்பு மாறுதல் லிஸ்ட் (Promotion list) வாசித்து, மேல் வகுப்புக்கு மாற்றப்பட்ட மாணவர்களும் ஏனையோரும் புது வகுப்புகளில் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் உழைக்கவேண்டும் என்றும், இவ்வருஷத்தில் சங்கீதம் (Music) ஒரு புது கட்டாயப் பாடமாகப் போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப்பற்றியும் கூறி அனைவரும் அனுதினமும் தத்தம் கடமைகளைக் கைப்பிடித்தொழுகவேண்டுமென்றும் இன்னும் பற்பல புத்திமதிகளையும் கூறி பாடசாலை தொடங்கச் செய்தனர்.

29–6–'40 : இன்று போதனு பயிற்சிக்காகப் புதுமாணவர்களைச் சேர்க்க ப்ரவேச பரீட்சை (Entrance Examination) நடத்தப்பட்டது. மற்ளுரிடத்தில் காட்டியுள்ளபடி பரீட்சை எழுதினவர்களில் தேவையான மாணுக்கர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் ஜாபிதா வாசிக்கப்பட்டது. முன் எந்த வருஷத்திலும் இல்லாதபடி இவ்வருஷம் மிகவும் அதிகமான பேர் ஷை பரீட்சை எழுதினர். அதேபோல், தேர்ந்தெடுக்கப்படாத பலரும் தங்கள் வீடு திரும்பும்படியாயிற்று. மற்ளுெரு முக்கிய விஷயம். இன்று எமது பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் மத்தியான விருந்தும் (Staff Dinner). மாலையில் சிற்றுண்டியும் (Tea party) அளிக்கப்பட்டது. இவ்வித விருந்து ஏற்பாடுகள் இப்பாடசாலையில் முதன் முதலாய் இவ்வருஷத்தில்தான் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தகும்.

புளியால்பதியில் பெற்றோர் சங்க புனித விழா

M. S. Irudayam Pillai.

17-6-1940-ல் புளியால் முத். அருளானந்தரின் பாடசாலை என்றுமில்லா அலங்கார சிறப்புடன் விளங்கினது. இச்சிறப்பின் காரணத்தை, தெரிசிப்போரறிய, பாடசாலை முன்னணியில் தொங்கிய "பெற்றோர் சங்க விழா" என்னும் விளம்பரமே உதவியாயிருந்தது.

பாடசாலை மாணவர்கள் ஒன்றுசேர்ந்து சந்தோஷ ஆர்ப்பரிப்புடன், பிரதி வீடுகளுக்கும் சென்று, அழைப்பிதழைக் காண்பித்து, இன்று எம்பாடசாலைக்கு விஜயம்செய்து எங்களைக் கனப்படுத்தவேண்டுமென்று பெற்றோரை வேண்டிக்கொண்டனர். அதற்கேற்ப, விஜயம் செய்தோர் அமைதியடைய, கிராமப்போன் என்னும் வாத்யக்கருவியதால், பல்வேறு சங்கீதம், தமாஷ் முதலியவைகளால் அங்கு குழுமியிருந்த ஜனங்களை மகிழ்வுறும்படி செய்யப்பட்டது.

8-30-மணிக்கு புளியால் உதவிப்பங்குசுவாமியாரான கனம் சங். S. வேதமுத்து சுவாமியவர்கள் கரகோஷத்தினிடையில் இப்பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த விசித்திரமேடையில் இச்சங்கத்தலைவராய் எழுந்தருள, பாடசாலை மாணவர்களால் கடவுள் ஸ்துதி பாடப்பட்டது. பிறகு ஷை பாடசாலை தலைமை ஆசிரியரால் "பெற்றோர் சங்கத்தின் நோக்கம்" பற்றி விவரிக்கப்பட்டதும், ஓரிக்கோட்டை R. C. ஸ்கூல் தலைமை ஆசிரியர் M. R. ஞானப்பிரகாசம்பிள்ளை என்பார் "கிராமக் கல்வியும், பெற்றோரின் கடமையும்" என்பதுபற்றி வெகு சாதுரியமாய் சொற்பொழிவாற்றினர். அதன்பின் ஷை பாடசாலை மாணவர்களால் நெருப்புப்பந்த விளையாட்டுகள் ஆடப்பட்டன. பிறகு பாடசாலையில் தேர்ச்சிபெற்ற மாணவர், மாணவிகளுக்கு, சங்கத்தலைவரவர்களால் சன்மானங்கள் வழங்கப்பட்டன. அக்கிராசனர் "கல்வியின் மேன்மையையும், பாலர் கல்வி பயில பெற்றோருக்குள்ள கரிசனம்" பற்றியும் வெகு தெளிவாய் யாவரும் கண்டுணர விரித்துரைத்தார்கள்.

இறுதியாய் இச்சங்கத்தில் தலைமைவகித்த கனம். சங். சுவாமியவர்களுக்கும், விஜயம்செய்த பெற்றோருக்கும், மற்றோருக்கும், இப்பாடசாலை தலைமை ஆசிரியரால் வந்தனோபசாரம் கூறி, ராஜவாழ்த்துடன் பெற்றோர் சங்கம் இனிது நிறைவெய்தியது.

பால ஸங்கீத வாசகம்

(4-ம் 5-ம் வகுப்புகள்)

A. Gnanadickam, *Music Teacher*,

St. Joseph's Higher Elementary School, Ootacamund.

கல்வியே சிறந்த பொருள்

கமாஸ் நபகம்

1. வாலபரு வத்தில்தேடும் பள்ளிப்பொரு ளே
காலத்தில்கை கூடும்ஞானக் கல்விப்பொரு ளே
2. உலகில்உயர் சுகிர்தப்பொருள் பள்ளிப்பொரு ளே
இலகும்உயர் அறிவும்குணமும் கல்விப்பொரு ளே
3. உருகாக்கரை யாவெள்ளத்தால் பள்ளிப்பொரு ளே
திருடர்அதை பறிக்கவொண்ணு கல்விப்பொரு ளே
4. குணமாய்பிறர்க் கியக்குறையா பள்ளிப்பொரு ளே
மணமாய்மென் மேலும்பெருகும் கல்விப்பொரு ளே
5. சொல்லசொல் நிறையும்தூய பள்ளிப்பொரு ளே
நல்லநற் பேறும்நாட்டும் கல்விப்பொரு ளே
6. கற்ருர்பலர் உபகரிப்பர் பள்ளிப்பொரு ளே
பற்றிஎரி யாநெருப்பில் கல்விப்பொரு ளே.

பப | பா-பப ‖ பத | நி - தபம ‖ பத | நிதாநி ‖ ஸ்ா | ,ஸ்ஸா ‖
வா. | ல-பரு ‖ வ. | த்தில்-தே.டும் ‖ ப. ள்ளிப்பொரு ‖ ளே | , எ எ
ஸ்ஸ் | ஸ்ா- நித ‖ தா | ப - பமம ‖ மப | ம-மகரி ‖ கமபா | ம-மமா ‖
கா. | லத்-தில்கை ‖ கூ | டும் - ஞா.ன ‖ க்கல்வி-பொ.ரு ‖ ளே.. | எ எ எ

இவ்விதமே மற்ற எல்லா அடிகளையும் பாடவேண்டும்.

;= இரண்டு அக்ஷரங்கள். ,= ஓர் அக்ஷரம். மேல் வரையப்பட்டிருக்கும் ஸ்வரங்களை ஓர் அக்ஷரத்திற்கு ஓர் ஸ்வரம் வீதம் ரூபக தாளத்தில் வாசிக்கவேண்டும். கமாஸ் இராகத்தை 28-ம் நெம்பர் மேளகர்த்தா ஸ்வரநடை. இதன் விவரம்: ஸங்கீத ஆரம்ப ஆசிரியர்கள், எமது கர்னாடக ஸங்கீத போதினி 1-ம் புத்தகத்தில் பார்க்கவும்.

கற்பிக்கும் முறை

1. ஸங்கீத ஆசிரியர் பாட்டைக் கரும்பலகையில் பதம் பிரித்து எழுதி, பிள்ளைகளைப் பலதடவை வாசிக்கச்செய்யவேண்டும்.

2. வார்த்தைகளின் உச்சரிப்பு சரியாக வரும்பொருட்டு, பாட்டின் பதங்களை இரண்டொருமுறை தனித்தனியாகச் சொல்லச்செய்யவேண்டும்.

3. எல்லாப் பிள்ளைகளுக்கும் நன்ருய் வாசிக்கத் தெரிந்த பின் க. ப. வில் எழுதியதை அழித்து, ஷை காட்டியபடி இசைக்கும் தாளத்திற்கும் இயைந்தவிதமாய்ப் பிரித்தெழுதி பாலர்களையும் அவ்விதமே தங்கள் நோட்டுப்புத்தகத்தில் எழுதச்செய்யவும்.

4. ஒரு நாளைக்கு ஓர் அடி கற்பிக்கவேண்டும். (உ-ம்) முதல் அடியைக் கற்பிக்கும்பொழுது அதன் கருத்து நன்கு விளங்க, இரு அண்ணன் தம்பிகள் கதையை முதலில் எடுத்துச் சொல்லி இளம் வயதிலேயே தம்பி படிக்காமல் சோம்பலினுல் கெட்டதையும், அண்ணன் கஷ்டப்பட்டு படித்ததினுல் பிற்காலத்தில் வெகு சிறப்புடன் வாழ்ந்திருந்த கதையைப் பிள்ளைகளுக்குச் சொல்லி முதல் அடியை இராகத்துடன் உபாத்தியாயர் பாடவேண்டும். இவ்விதம் பாடும்பொழுது பிள்ளைகளை உடனே பாடவிடாமல் அவர்களைக் கவனித்துக் கேட்கும்படி செய்யவேண்டும். பிள்ளைகளுக்கு நன்ருய் இராகவாசக நடை பிடிபட்டுவிட்டவுடன் வகுப்பில் அந்த ஒரே அடியை ஒவ்வொருவராகத் தனித்தனியே பாடச்செய்யவேண்டும். இச்சமயத்தில் ஆசிரியருக்கு வாத்தியப்பயிற்சி இருந்தால் வாசிக்க பிள்ளைகள் கூடவே பாடிவருவர். இவ்விதமே மற்ற 5 அடிகளையும் 5 நாள் அல்லது 2 வாரங்களில் கற்பிக்கலாம். ஆனுல் அவசரப்பட்டு ஒரேநாளில் எல்லா அடிகளையும் கற்பிக்கக்கூடாது. ஸங்கீத நேரத்தில் உபாத்தியாயர் எடுத்துக்கொண்ட ஓர் அடி பாட்டை அப்பொழுதே எல்லாப் பிள்ளைகளும் மனப்பாடமாய்ப் பாடும்படியும் செய்யவேண்டும்.

(தொடரும்)

புத்தக விளம்பரம்

School Nursery Rhymes

(with musical notes to the teachers)
For teaching songs to standards I—III.
according to the newly published
Educational Syllabus of 1939.

Price 6½ Annas.

புதிய பாடத் திட்டத்தை அனுசரித்து
முதல் மூன்று வகுப்புகளுக்கு எழுதப்பட்ட

பள்ளி பால ஸங்கீத வாசகம்

வெளிவந்துவிட்டது

மாணவர்களுக்குரியது புத்தகம் ஒன்றுக்கு ரு. **0-4-6.**

ஸங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு
ஸ்வரதாளங்களுடன் கூடியது
புத்தகம் ஒன்றுக்கு ரு. **0-6-6.**

பள்ளிக்கூடங்களுக்கு மொத்தமாய் வாங்குவோர்களுக்கு கமிஷன் கொடுக்கப்படும். விவரங்களுக்கு எழுதவும்.

A. ஞானதிக்கம், மியூஸிக் டீச்சர்,
தி சௌத் இண்டியன் மியூஸிக் ஸ்கூல்,
செயிண்ட் தாமஸ் சர்ச் ரோட், உதகமண்டலம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182463
சென்னை 600 008

வேத சத்தியங்கள்

இச் சிறு புஸ்தகத்தில் மனிதன் ஆத்தும இரட்சண்யம் அடைவதற்காக விசுவசிக்கவேண்டிய சத்தியங்கள், அநுசரிக்கவேண்டிய தேவ கட்டளைகள், இரட்சண்யம் அடைவதற்கு உதவியான வழிபாடுகள் எளிதான வியாக்கியானங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் குருவானவர் இல்லாத கோவில்களிலே, பூசை மந்திரம் சொல்லும்போது, இச்சிறு புஸ்தகத்தில் அடங்கியிருக்கிற பிரதான சத்தியங்களை வாசிப்பது வெகு பிரயோசனமாயிருக்கும்.

(Fl. $\frac{1}{8}$—7-ம் பதிப்பு) 168 பக்கங்கள் அணா 5.

நல்லொழுக்கம்

(By Bishop Roche)

இதில் சுகவழி, அன்னபானம், நித்திரை, நடையுடை பாவனை, உண்மையுடைமை, பேசும் வகை, குடும்பம், பள்ளிக்கூடம், சிநேகம், காகிதம் எழுதும் வகை, உத்தியோகம் இவைகளைச் சார்ந்த விஷயங்கள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் எத்திறத்தாருக்கும் விசேஷமாய் பிள்ளைகளுக்கே பிரயோஜனமும் அவசியமுமானது. வெகு காலமாக Middle School-களிலும், Elementary School-களிலும் இவற்றைப் பாடப் புஸ்தகமாக உபயோகித்துவருகிறார்கள்.

(13-ம் பதிப்பு)

82 பக்கங்களடங்கியது அணா 3.

தபாற் செலவு 0-1-3.

திவ்விய சேசுவின் திருச்சரிதை

3-ம் பதிப்பு

96 பக்கங்களடங்கியது

கர்த்தர் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, உத்தானம், பரலோக ஆரோகணம், திருச்சபை ஸ்தாபகம், அவர் செய்தருளிய புதுமைகள், அளித்தருளிய ஆத்தும சரீர நன்மைகள், அவரது பிரசங்கம், உவமைகள் முதலியவைகளைத் தனித்தனியே ஒவ்வோர் பாடத்தில் விவரித்திருப்பதால் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களுக்கு பாடப்புத்தகமாக இயற்றியிருக்கிறது. நமது பரிசுத்த ஆண்டவரின் ஜீவிய சரிதையை அறிய விரும்பும் பெரியோர், புதுக்கிறீஸ்துவர், இதர மதஸ்தர் இந்நூலை வாசித்து அபரிமிதமான பலனடைவார்கள். **விலை அணா 3.**

தபாற் செலவு 0-1-9.

செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ், **திருச்சினாப்பள்ளி.**

"பாலர் சன்மார்க்க வாசகம்"

புதிய புத்தகம்! புதிய புத்தகம்!!

பாலர் யாவரும் படிக்கத்தக்க புத்தகம்!

பெற்றோரும் மற்றோரும் பார்க்கவேண்டிய புத்தகம்.

பக்கம் 28 விலை 9 பைசா. தபாற் செலவு 6 பைசா.

தேம்பாவணிக் கருப்பொருள் அல்லது அர்ச். சூசையப்பர் மான்மியம்

வீரமாமுனிவர் அருளிய தேம்பாவணியின் உட்பொருட்களைத் திரட்டி இனிய தமிழ் நடையில் அச்சு பதிப்பித்திருக்கிறது.

(Cr. 1/8 –2-ம் பதிப்பு—228 பக்கங்கள்)

விலை ரூ. 0—14—0.

சமூக தர்மம் புதிய புத்தகம்

மாந்தர் பலர் நிலையாகச் சேர்ந்து வாழ்வது சமூகமெனப்படும். குடும்பம் சமூகத்தின் அஸ்திவாரம், அரசாங்கம் அதன் சிகரம். உலகில் தோன்றும் சகல மனிதரிடமும் சமூக உணர்ச்சி இயற்கையாக அமைந்துளதால் இவ்வுணர்ச்சியை நல்வழிப்படுத்த அவரவர் தத்தம் உரிமையையும், கடமையையும் அறிதல் வேண்டும். உறவினருள் விளங்கவேண்டிய ஒழுக்கமுறையை விவரிப்பது குடும்ப தர்மமென்றும் ஆட்சி முறையில் அனுஷ்டிக்கவேண்டியவைகளைப் புகட்டுவது இராஜ தருமமென்றும், எஞ்சிய விஷயங்களை விளக்குவது சமூக தர்மமென்றும் அறிவாளிகள் பாகுபாடுசெய்வது சகஜம். எனினும் இந்நூலில் சமூக தர்மமென்று குறிப்பிடுவது அவரவர் பிழைப்புக்காக உழைக்கும் முறையில் கொள்ளும் உரிமையும் கடமையுமே.

தற்சமயம் பொதுவுடைமைவாதிகள் உலகில் தரித்திரத்தைத் தீர்க்கவும், தர்மத்தை நாட்டவும் பல்வேறு உபாயங்களைப் போதித்துவருகின்றனர். அன்னோரது போதனையில் குணம் இன்னது குறை இன்னதென்று பகுத்தறிய வேண்டுமாயின் தொழில் முறையில் மாந்தருடைய கடமைகளைக் கண்டுணர்வது அவசியம். இதை விவரிப்பதே இந்நூலின் நோக்கம்.

Crown 8vo—96 பக்கங்கள் உள்ளது. விலை அணா 4.

தபாற் செலவு ... ... 0—1—9

திருச்சி அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீசில் கிடைக்கும்.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானுவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப்பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	ரூ. 1—0—0
வெளி நாடு	ரூ. 1—6—0

விலாசம் :—

சூப்பேரின்டேன்டேண்டு,

சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,

திருச்சினப்பள்ளி.

"சத்திய போதினி" யில் காணப்படும் வர்ணப்படங்கள் வேண்டுமா?

			ரூ. அ. பை.
100 படங்கள்	...	...	2—8—0
50 ,,	...	...	1—8—0
25 ,,	...	...	0–12—0

தபாற்செலவு பிரத்தியேகம்.

விலாசம் :—

சூப்பேரின்டேன்டேண்டு,

சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,

திருச்சினப்பள்ளி.

புத்தக விளம்பரம்

சென்னை துரைத்தனத்தாரால் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு 1939-ம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள புதியப் பாடத்திட்டத்தை அனுசரித்து தற்கால நவீன முறையில் முதல் ஐந்து வகுப்புகள் வரைக்கும் உபயோகமான தமிழ்-கணக்கு, பூகோளம், இந்துதேச சரித்திரம், தோட்டவேலைகள், ஸிவிக்ஸ் முதலிய புஸ்தகங்கள் என்னால் வெளியிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

புஸ்தகங்கள் கத்தோலிக் ஆசிரியர்களைக்கொண்டு தற்கால பாடத்திட்டத்தை அனுசரித்து வெளிவந்துள்ளன. இன்னும் என்னிடம் உயர்தரக் கலாசாலைகளுக்கு கத்தோலிக் ஆசிரியர்களால் எழுதப்பட்ட தமிழ் புஸ்தகங்கள் வெளிவந்து அனேக பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று பாரங்களுக்குரிய சரித்திரம், சைன்ஸ் முதலியனவும் இருக்கின்றன.

புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து முதல் ஐந்து வகுப்புகளுக்கு எழுதப்பட்ட புஸ்தகங்களின் அட்டவணை

மாணவர் மணிமாலை ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கு				
கணக்கு	மூன்றாம் வகுப்பு முதல்		5-ம்	”
சிவிக்ஸ்	மூன்றாம்	”	5-ம்	”
தோட்டவேலை	மூன்றாம்	”	5-ம்	”
சரித்திரம்	மூன்றாம்	”	5-ம்	”

பூகோளம் 5-ம் வகுப்புக்குரியது.

விபரமான கேட்லாக் வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

கனம் பள்ளிக்கூட மானேஜர்சுவாமி அவர்களும், ஆசிரியர்களும் என்னுடைய பாடப்புத்தகங்களை தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் வைத்து கத்தோலிக் பிரசுர கர்த்தாவாகிய என்னை ஆதரிக்கும்படியாக மிகவும் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

A. V. D. Packiam Pillai,
Educational Publisher,
TUTICORIN.

A. V. D. பாக்கியம் பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
தூத்துக்குடி.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.